## *புனித பத்தேர்னுஸ் (482-550)*

இவர் பிரான்ஸ் நாட்டில் பிறந்தார். இவருடைய தந்தை அயர்லாந்து நாட்டில் தனிமையில் வாழ்ந்து வந்தார். நம் புனிதரும் தம் தந்தையைப் பின்பற்றி துறவியாக வாழ்நது வந்தார். பின்னர் இவர் வேல்ஸ் நாட்டுக்குச் சென்று அங்கு ஒரு மடத்தைக் கட்டினார். பின்னர் இவர் பிரான்ஸ் நாட்டுக்குத்திரும்பி வந்து காட்டில் தவ வாழ்வு நடத்திவந்தார். விக்கிரக ஆராதனை செய்த அநேகரை மனந்திரும்பினார். அருகிலிருந்த நாடுகளுக்குப் போய் வேதம் போதித்தார். முதிர் பிராயத்தில் இவரை ஒரு நகரின் ஆயராக்கினார்கள். அந்த மறை மாவட்டத்தை பதின்மூன்று ஆண்டுகளாக நடத்தியபின் இவர் இறந்தார்.

**சிந்தனை:**

கடவுள் இவருக்கு கொடுத்த திறமைகளைப் பயன்படுத்தி அநேகரை கடவுளிடம் இவர் கொண்டு வந்தார். எவ்வித திறமையும் அற்றவர்கள் மனிதரிடையே யாருமே இல்லை. நமது திறமையை நல்ல வழியில் பயன்படுத்துவோமாக.

**செபம்:**

ஆண்டவரே, நாங்கள் நேரத்தை நன்கு பயன்படுத்தி ஏராளமான நன்மைசெய்ய வரம் தாரும்.